In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

O.S.No.297/2022 | Deposition of Witness: PW.2

Name: Sakthivel | Calling:

Father Name: | Religion:

Village: | Caste:

Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 26-03-2025.

முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன்.

புரோநோட்டை எழுதியதும் சாட்சியுமாக கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து வாதசாஆ.4.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் கொசவபட்டியில் உள்ள அட்சயா பள்ளியில் வேலை பார்த்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்தவர் பெயர் ராமசாமி. வாதி எனக்கு மாமன் முறை. பிரதிவாதி எனக்கு அண்ணன் முறை. பிரதிவாதி பெரியசாமி எனக்கு உறவினர் இல்லை என்றும் நானும் வாதியும்தான் உறவினர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரியல் எஸ்டேட் செய்து வருகின்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி வாதியிடம் எப்போது கடன் கேட்டார் என்றால் சரியாக எனக்கு ஞாபகமில்லை. வாதியிடம் பிரதிவாதி ரூ.20 லட்சம் கடனாக பெற்றார். வாதிக்கு ரூ.20 லட்சம் எப்படி வந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. எந்த தேதி பிரதிவாதி கடன் பெற்றார் என்று நினைவில்லை. எதற்காக பிரதிவாதி கடன் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியும் அவரது மனைவி பழனியம்மாளும் வந்து வாதியிடம் கடன் வாங்கிய விவரம் எனக்குத் தெரியும். பிரதிவாதிக்கும், அவர் மனைவி பழனியம்மாளுக்கும் ஒரு கோடி பெறுமானமுள்ள சொத்துக்கள் இருக்கும் விவரம் எனக்கு தெரியும். அவர்களுக்கு ரூ.50 லட்சம் பெறுமானமுள்ள வீடு இருக்கிறது என்றால்

சரிதான். மேலும் அவர்கள் இருவர் பெயரிலும் வேடசந்தூர் கரூர் வைஷ்யா வங்கியில் போதுமான அளவுக்கு பணம் வைப்பீடு செய்துள்ளார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. புரோநோட்டு வாதியின் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. புரோநோட்டில் பி.சக்திவேல், டி.கனிவேல் ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டார்கள். அந்த சாட்சிகளை யார் கூட்டி வந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. பிரதிவாதி அன்று காலை 10, 10.30 மணியளவில் வாதி வீட்டுக்கு வந்தார்கள். பிரதிவாதி அதற்கு முன்னர் வாதியிடம் எப்போது பணம் கேட்டார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் வாதி பரிமளா என்பவரிடம் அவரது நிலத்தை விலைக்கு பேசி ரூ.20 லட்சம் வீட்டில் வாங்கி வைத்திருப்பதாக சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியும். அது உண்மைதான். பரிமளாவுக்கு வாதி எத்தனை பத்திரங்கள் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வாதி ராமசாமியின் மனைவி பெயர் அகரமுத்து. வாதியும் அவர் மனைவியும் சேர்ந்து அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பரிமளா என்பவருக்கு பிவாசாஆ.1, 2 கிரையப்பத்திரங்களின் படி ரூ.4 லட்சத்திற்கு மட்டுமே கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியிடம் பிரதிவாதி எந்தக்காலத்திலும் கடன் வாங்கவில்லை என்றும், புரோநோட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றும் வெறும் கையெழுத்து மட்டுமே போட்டேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.03.26 15:47:41 +0530

Principal District Judge,
Dindigul.